## நில ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நிலத்தை மீட்கும் வேட்டை தொடரும்!

# அறநிலையத் துறையின் ரூ.7450 கோடி நிலத்தை மீட்டது, ‘திராவிட மாடல்’ ஆட்சி!

## சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம்!

**சென்னை, மார்ச் 22 -**

**“சுமார் 7,450 கோடி ரூபாய் மதிப்பிலான அறநிலையத் துறையின் நிலங்களை மீட்டது இந்த ‘திராவிட மாடல்’ ஆட்சி!” என்று சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு :-

**க.சொ.க.கண்ணன்:** ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், கொடுக்கூர், சௌந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு :** உறுப்பினர் அவர்கள் கோரிய சௌந்தரேஸ்வரர் திருக்கோயில் என்பது 50 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் கேள்வியின் வாயிலாக இந்தக் கேள்வியைக் கேட்டாலும், பக்கத்திலே உட்கார்ந்திருப்பவர் நாத்திகர் என்றாலும், ஆத்திகருக்குண்டான பணியையும் சேர்ந்து செய்வதைப் போல் தினந்தோறும் எங்கள் மாவட்டத்திலே இருக்கின்ற இந்தக் கோயில் என்னவாயிற்று, அந்தக் கோயில் என்னவாயிற்று என்று கேட்டதற்கிணங்க தற்போது 50 இலட்சம் ரூபாய் செலவிலே இந்தத் திருக்கோயிலினுடைய திருப்பணி மேற்கொள்ளப்பட்டு, 10 சதவிகிதப் பணிகள் முடிவுற்றிருக்கின்றன. தொடர்ந்து இந்த ஆண்டு இறுதிக்குள் மீதமிருக்கின்ற பணிகளை நிறைவேற்றி குடமுழுக்கு நடத்தப்படும்

**க.சொ.க. கண்ணன்:** ஆண்டிமடம் ஒன்றியம் புதுக்குடி ஊராட்சியிலுள்ள பசுபதீஸ்வரர் திருக்கோயில், ஜெயங்கொண்டம் ஒன்றியம் முத்துசேர்வாமடம் வரதராஜ பெருமாள் திருக்கோயில் ஆகிய இரண்டு கோயில்களும் பழமையான திருக்கோயில்கள். இந்தத் திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தித்தர அமைச்சர் முன்வருவாரா?



**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** உறுப்பினர் கோரிய பசுபதீஸ்வரர் திருக்கோயில் மற்றும் வரதராஜ பெருமாள் திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களும்

*19-4-2025* அன்று பாலாலயம் தொடங்கப்படவிருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் மனநிறைவோடு அந்தப் பாலாலயத்தில் கலந்துகொண்டு, திருப்பணியைத் துவக்கி வைத்தபிறகு இந்த ஆண்டுக்குள், இந்த இரண்டு திருக்கோயில்களுக்கும் குடமுழுக்கு நடைபெறும்.

**க.சொ.க. கண்ணன்:** ஜெயங்கொண்டம் ஒன்றியம் இறவாங்குடி, கல்லேரியில் இருக்கின்ற ஆதி திராவிடர் வசிக்கும் பகுதியில் அமைந்துள்ள வீரனார் திருக்கோயில் மற்றும் ஆதி திராவிடர்கள் புனரமைப்பு செய்வதற்கு எனது தொகுதியில் கோரிக்கை வைத்திருக்கின்ற பல்வேறு கோயில்களுக்கு ஆதி திராவிடர் திருக்கோயில்கள் திருப்பணி திட்டத்தின்கீழ் செய்து தருவதற்கு அமைச்சர் முன்வருவாரா?

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** உறுப்பினர் கோரிய இந்த வீரனார் திருக்கோயில் என்பது ஆதி திராவிடர் மக்கள் வசிக்கின்ற பகுதியிலே இருக்கின்ற திருக்கோயில். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் தமிழக முதல்வர் அவர்கள், ஆதி திராவிடர் பகுதிகளிலே இருக்கின்ற திருக்கோயில்களுக்கும், கிராமப்புற பகுதிகளிலே இருக்கின்ற திருக்கோயில்களுக்கும் செய்தவற்றை 1 நிமிடத்தில் சொல்ல பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதி வேண்டுகிறேன். இந்த ஆட்சி ஏற்பட்டவுடன் ஆதி திராவிடர் மற்றும் கிராமப்புற திருக்கோயில்களினுடைய எண்ணிக்கையைக் கணக்கிடச் சொன்னார். கணக்கிட்டபோது ஆண்டுதோறும் ஆயிரம் திருக்கோயில்கள் என்று கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒரு இலட்சம் ரூபாய் என்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

அந்த ஒரு இலட்ச ரூபாயை இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தி, 1,000 திருக்கோயில்கள் என்று இருந்ததை 1,250 திருக்கோயில்கள் என்று கிராமப்புறங்களிலும், (மேசையைத் தட்டும் ஒலி) 1,250 கோயில்கள் என்று ஆதி திராவிடர் பகுதிகளிலும் எண்ணிக்கையை உயர்த்தினார். ஒன்றை இரண்டாக்கினார். இரண்டு இலட்சமும் போதவில்லையென்று தற்போது இரண்டரை இலட்சமாக்கி, ஆண்டுக்கு 5,000 கோயில்கள் என்று (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில் 15,000 கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. இந்தத் திருப்பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்றால், தலா 106 கோடி ரூபாய் என்று ஆதி திராவிடர் மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலும், கிராமப்புற பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கும், திருக்கோயில் திருப்பணிகளுக்காக 212 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்த முதல்வர், தமிழக முதல்வர் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள் கிறோம். உறுப்பினர் கோரிய வீரனார் கோயில் என்பது பட்டியலில் ஏற்கெனவே இணைக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**பி. அய்யப்பன்:** உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதியில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான 230 திருக்கோயில்கள் உள்ளன. அந்த 230 திருக்கோயில்களில், 200 திருக்கோயில்களுக்கு சுமார் 3,000 ஏக்கர் மானிய நிலங்கள் உள்ளன. அந்த 3,000 ஏக்கரில் 1,700 ஏக்கர் நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மீதமுள்ள நிலங்கள் கண்டறியப்பட வேண்டும். அப்பணிகளை மேற்கொள்ள, அந்தக் கோயில்களில் அற நிலையத் துறை பணியாளர்கள் இல்லை. எனவே, இந்த 230 திருக்கோயில்களுக்கும் 3 செயல் அலுவலர்களும், 2 ஆய்வாளர் பணியிடங்களையும் நிரப்பி, அந்த சொத்துக்களையும் கோயில்களையும் பாதுகாக்க, அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர், அவர் தெரிவித்த 230 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக சுமார் 3,000 ஏக்கர் நிலங்கள் இருப்பதாகச் சொன்னார். இந்த ஆட்சி ஏற்பட்டபிறகு, தமிழக முதல்வர் அவர்கள் முதலிலேயே கூட்டத்தில் தெரிவித்த கருத்து என்னவென்றால், திருக்கோயில் நிலங்களை அளவீடு செய்வதற்கு போதிய பணியாளர்கள் இல்லை என்ற கருத்து வந்தவுடன், வருவாய்த் துறையின்வாயிலாக 38 வருவாய் மாவட்டங்களுக்கு ஒவ்வொரு வட்டாட்சியர்களையும் நியமித்து, அவர்களுக்கு உதவியாக 2 Surveyorகளையும் நியமித்து, ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும், வருவாய் மாவட்டத்திற்கும், தலா இரண்டு ரேவர் rover கருவிகளை அளித்ததன் வாயிலாக சுமார் 7,450 கோடி ரூபாய் அளவிற்கு நிலத்தை மீட்ட ஓர் ஆட்சி திராவிட மாடல் ஆட்சி, தமிழக முதல்வர் அவர்கள் தலைமையிலே அமைந்திருக்கின்ற ஆட்சி.

உங்கள் கோரிக்கை தொடர்பாக, நீங்கள் விடுமுறை நாளில் இருக்கின்ற போது, அந்த மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய வட்டாட்சியரையும், Surveyorஐயும், அந்த திருக்கோயிலின் JC யையும் உங்களைச் சந்திக்கச் சொல்கிறேன். எந்த நிலங்கள் எல்லாம் இன்னும் மீட்கப்படவில்லை என்ற பட்டியலைத் தந்தால், உடனடியாக அந்த நிலங்களை மீட்பதற்குரிய பணிகள் தொடரும். இந்த ஆட்சியில் நில ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நிலத்தை மீட்கும் வேட்டை தொடரும், தொடர்ந்து நடைபெறும்.

**மு. பூமிநாதன்:** மதுரை (தெற்கு) தொகுதிக்குட்பட்ட திருவாப்புடையார் கோயிலைப் புனரமைப்பு செய்வதற்கு உபயதாரர்கள் நிதி வழங்கி செய்து தருவதற்கு தயாராக இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதனை உடனடியாகச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** அவர் கோரிக்கை வைத்திருந்த திருவாப்புடையார் கோயில் என்பது 1,000 ஆண்டுகள் பழமையான கோயில். வருமானம் இல்லாமல் இருக்கின்ற, 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களுக்கென்றே தமிழக முதல்வர் அவர்கள், பிரத்யேக நிதியாக ஆண்டுக்கு 100 கோடி ரூபாய் என்று கடந்த 3 ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்தார். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே 120 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தார். ரூபாய் 420 கோடி அரசின் சார்பிலும், ரூபாய் 130 கோடி உபயதாரர் நிதி என்று இதுவரை சுமார் 550 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2024- 2025 ஆம் ஆண்டிற்கான பட்டியலில் தாங்கள் கோரிய திருவாப்புடையார் திருக்கோயிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திருக்கோயிலில் வெகு விரைவில் பாலாலயம் செய்யும் பணி தொடங்கப்படும் .

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



மாதவரம் வடக்கு பகுதி 19ஆவது வட்ட திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் ஏற்பாட்டில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா மாத்தூர் முதல் பிரதான சாலையில் நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு தர்பூசணி, கிர்ணி பழம், நீர்மோர், இளநீர், வெள்ளரிக்காய், குளிர்பானங்கள், பழ வகைகள் ஆகியவற்றை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கவுன்சிலர் க. காசிநாதன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, கே.ஏழுமலை,பி. நிர்மல் குமார், வி. கார்த்திகேயன், பி. துரைசாமி, எஸ். உதயகுமார், பி. ஜெயராஜ், கா. சேரலாதன், துரை தசரதன், வட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தமிழ்நாடு வக்பு வாரிய தலைமை அலுவலகத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தமிழ்நாடு வக்பு வாரியத்தில் 29 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை நேற்று (21.03.2025) வழங்கினார். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு வக்பு வாரிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.நவாஸ் கனி, தமிழ்நாடு ஹஜ் கமிட்டி தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பி.அப்துல் சமது மற்றும் தமிழ்நாடு வக்பு வாரிய உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் – முதல்வர் பிறந்தநாள் விழா!

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மாபெரும் மாட்டுவண்டி ரேக்ளா போட்டி!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

*சென்னை, மார்ச்.22-*

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் மாட்டு வண்டி ரேக்ளா போட்டி நடைபெறுகிறது.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் நாளை (23/3/2025 ஞாயிறு) காலை 7 மணிக்கு நடைபெறுகின்ற இந்த மாபெரும் ரேக்ளா ரேஸ் போட்டியை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாடு செய்துள்ளார்.

17வது வட்டம் காந்திநகர், கண்ணம்பாளையத்தில் துவங்கி சென்றம்பாக்கம், தீயம்பாக்கம், பெரியார் நகர், வழியாக அரியலூர் வரை சென்று மீண்டும் அதே பாதையில் கண்ணம்பாளையம் வந்து அடைகிறது.

போட்டிகள் நான்கு பிரிவுகளாக நடைபெறுகிறது. இரண்டு பல் பெரிய இரட்டை மாடு, பல் படாத இரட்டை மாடு, இரண்டு பல் பெரிய மாடு, சிறிய மாடு ஆகிய நான்கு பிரிவுகளில் நடைபெறும் போட்டிகளில், தனித்தனியாக நடத்தப்பட்டு, வெற்றி பெறும் காளைகளுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, நான்காம் பரிசு என ரொக்க தொகையும் கோப்பைகளும் வழங்கப்படுகின்றன.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், வட்டச் செயலாளர்கள் கே. அங்குசாமி, இ. கண்ணப்பன், மாத்தூர் கா. தாமரைச்செல்வன், பி.எஸ். சந்துரு, வி.ஆர். குப்பன் வரவேற்கிறார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி நிர்வாகிகள் வி. திராவிட வீரன், கே. சிவசங்கரன், ஆ. ராஜேந்திரன், கௌரி, ஆர்.முரளி, க. காசிநாதன், பி. நிர்மல் குமார்,கே. செல்வன்,நா. மோகன் குமார் நாகூர், வி. கார்த்திகேயன்,பா. சந்திரன், கே. ராஜா, நந்தினி சண்முகம், வட்ட நிர்வாகிகள் ஏ. கோவிந்தராஜ், சிடி ஸ்டாலின், சி. பாலாஜி, பி.லதா, வா. பார்த்தசாரதி, சுகேந்திரன், நா. குமார், சி. மூர்த்தி, ராஜா, என். கவிதா நாராயணன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமை தாங்குகிறார். மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கழக அயலக அணி தலைவர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, கே. பி. சங்கர் எம்எல்ஏ, ஜே. அருண் ஆகியோர் போட்டியை துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகிறார்கள்.

மாவட்ட நிர்வாகிகள் மிசா மதிவாணன், வி. இராமநாதன், வி. கண்ணதாசன், வீ. கவி கணேசன், ஜி. சந்திரபோஸ், ஆர். பத்மநாபன், குறிஞ்சி எஸ். கணேசன், மூ. ராஜேந்திரன், டி. ராமகிருஷ்ணன்,பா. அறிவழகி, எம். ஆனந்தன், தி .மு. தனியரசு, ஜி. துக்காராம், ஏ .வி. ஆறுமுகம், எஸ். நந்தகோபால், வை. ம.அருள்தாசன், மீ. வே. கருணாகரன், ஜி. தயாளன், ஜி. ராஜேந்திரன், ஜெ. ஜெயமதன் ,இரா. முருகேசன், என். பரந்தாமன்,டி.ஏ. ராஜு, பி. சாந்தி, சி. அற்புதராஜ்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி மதன் குமார், லயன் வி. தியாகராஜன், சன் முனியாண்டி, எம். எம் .செந்தில், எஸ். ஏ. சீனிவாசன், கோமளவல்லி, அம்மு மூர்த்தி, டாக்டர் து. கோபால், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சி. எஸ். எஸ். டி. சீனிவாசன், மோரை சதீஷ்குமார், டி.ஜி. ஆர். மணிவண்ணன், கேபிள் த. வே. கணேசன், ஜி.கே. இனியன், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு ,பி. ஜெயராஜ்,டி. வினோத் ,இ .எம். மனோகர்,ஜி. ராஜ்குமார், எஸ். உதயகுமார், கே. சண்முகப்ரியன், எஸ். கோபாலகிருஷ்ணன், எஸ். சிவக்குமார், மாத்தூர் கோபிநாத், சின்ன மாத்தூர் மணிகண்டன், துரை தசரதன், முகமது வசீம், கே .ஏழுமலை, எஸ். கருணாகரன், க. சரவணன், எச். பீர்முகமது, பி. குணசேகரன், எம். அமுதா, எஸ். கலைச்செல்வி,ஆர். சுதா, எஸ்.சுதா, டி. ஜெய்சங்கர், என். சந்திரன், டி. வெங்கடேசன், பேன்சி ரமேஷ், கா. சேரலாதன், எஸ். பார்த்தசாரதி, ஜெ. யுவராணி, எஸ். ஆர். சேகர் ராஜன், சி. ஹரிஷ், சுப்பிரமணி,

மாதவரம் வடக்கு பகுதி மகளிர் அணி அமைப்பாளர் எஸ். சுகாசினி,துணை அமைப்பாளர்கள் டி. அமலா, ராஜேஸ்வரி, என் .கவிதா நாராயணன், ஆர். ஜெயபாரதி, அத்திக்குளம் தேவி, பி .சரஸ்வதி, தா. மகாலட்சுமி, பகுதி மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் அபிதா முகமது அலி, ஜி. வயலட்ராணி, சகிலா, சாந்தி, பெரியநாயகி, பார்கவி, கஸ்தூரி, சரஸ்வதி, பகுதி இளைஞரணி நிர்வாகிகள் ர. விஜய் ஆனந்த், எம். என். அஜய் தென்னவன், ஆ. விஜயன், கா. யுவராஜ் ,கோ. ராஜேஷ் கண்ணன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ் ,ஆ. சாந்தகுமார், வே. சிவப்பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கிறார்கள். இறுதியாக எஸ். பாலாஜி,எம். என். அஜய் தென்னவன் நன்றி கூறுகிறார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்து வருகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கீரை ஆ. தமிழ்ச்செல்வன்

### மார்ச் 22 (1997)



புதுக்கோட்டை மாவட்டக் கழக துணைச் செயலாளராகவும் – குன்றாண்டார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

மாவட்ட ஊராட்சி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“கடுமையான சோதனைகள், கொடிய அடக்குமுறைகள், கழகத்தை தாக்கியபோதெல்லாம் அந்தக் கழகக் காளை நெஞ்சுயர்த்தி நிமிர்ந்து நின்று இந்த இயக்கத்தைக் காத்து நின்ற காட்சியை எண்ணிப் பார்க்கிறேன். தனது கனிவான நடைமுறையினால் கழக உடன்பிறப்புக்களைக் கவர்ந்து நின்ற பாங்கினை நினைத்துப் பார்க்கிறேன்” என தலைவர் கலைஞர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சொ. காவேரிமணியம்

### மார்ச் 22 (2006)



மதுரை மாவட்டக் கழகச் செயலாளராகவும், மாநகரச் செயலாளராகவும் சிறப்பாக பணியாற்றியவர்.

தலைமைக் கழகத் தீர்மானக்குழுத் தலைவராகவும், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினராகவும், மதுரை வடக்கு மாவட்ட தொழிற்சங்கத் தலைவராகவும் திறம்பட பணியாற்றியவர்.

1971ல் திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி நற்பெயர் பெற்றவர்.

“எந்த நிலையிலும் கொள்கை உறுதியில் ஒரு சிறிதும் குலையாமல்; அழுத்தம் திருத்தமாக அரசியல் செயல்பாடுகளை அஞ்சா நெஞ்சுடன் ஆற்றிவந்த அரிமா அவர். எளிமையான வாழ்க்கை. எஃகு உள்ளம் – என்றைக்கும் எங்களோடு ஒருவராக இருந்து இயக்க வளர்த்த இனிய உடன்பிறப்பு” எனத் தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**